5th Mrach 1968[

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் : தலைவரவர்களே, அரசாங்க மானியம் பெறும் இந்தச் சங்கங்களை எல்லாம் மேற்பார்வை செய்ய, அரசாங்க சார்பில் ஆடிட் செய்ய, தணிக்கையாளர்கள் நியமித்து மேற்பார்வை செய்தபிறகு அவைகளுக்குப் பணம் கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அது பற்றிய விவரம் இல்லை. பணம் கொடுப்பதற்கு முன்னால் கணக்கைச் சரிபார்த்த பிறகு தான் முடிவு செய்யப்படுகிறது.

திரு. எம். எத்திராஜுலு : கை, கால் இழந்தவர்களுக்கு பொய்க் கால், பொய்க்கை வைக்க அரசாங்கம் ஏதாவது உதவி செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மூலக்கேள்விக்கும் இந்த கேள்விக்கும் தொடர்பில்லை.

Family planning surgical operations

* 179 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state

(*a*) the monthly average of family planning surgical operations done in Tamilnad during the year 1966 ;

(*b*) the respective number of (1) males and (2) females on whom these operations were done ; and

(c) the number of Family planning operations done monthly from 1st March to 31st August 1967 ?

குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1966-ம் ஆண்டு தமிழகத்தில் மாதம் சராசரி எத்தனை குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகள் நடந்தன ?

(இ) (1) ஆண்கள், (2) பெண்கள் முறையே எத்தனை பேருக்கு நடந்தன ?

(உ) 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் தேதி முதல் 1967-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31-ம் தேதி வரை மாதந்தோறும் எத்தனை குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சைகள் நடந்துள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) ஒரு மாதத்திற்கு சுமாராக 20,900.

(இ) (1) அந்த ஆண்டில் ஆண்கள் 245,430.
(2) பெண்கள் 5,313.

(உ) மார்ச்	9,763
ஏப்ரல்	8,278
மே	7,240
ஜூன்	6,871
ஜூலை	8,719
ஆகஸ்ட்	10,272
மொத்தம் ..	51,143

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இது எந்த மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறது. ஆபரேஷன் அதிகமாக எந்த மாவட்டத்தில் செய்யப்பட்டிருக்கிறது ? குறைவாக எந்த மாவட்டத்தில் இருக்கிறது ? சில மதஸ்தர்கள், குறிப்பாக கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், இதை ஆதரிப்பதாகத் தெரியவில்லை, என்று சொல்லப்படுகிறது, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அது பற்றிய விவரம் என்னிடம் இப்போது இல்லை.

திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர்: இதனால் ஜனத்தொகை ஏதாவது குறைந்திருக்கிறதா ? கொஞ்சமாவது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : குறைந்திருப்பதாகத் தான் சொல்லப்படுகிறது.

திரு. கே. ராஜாராம் : குறைந்ததால் தான் நம்முடைய மூன்று பார்லிமெண்ட் சீட் போய்விட்டது.

Intra Uterine Contraceptive Device

*180. *Q.*—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether an I.U.C.D. was inserted in a woman without her consent on 3rd August 1967 at the Hospital for Women and Children, Egmore ;

(*b*) whether this has been reported to the Superintendent of the hospital and the Police ; and

(*c*) the steps taken thereon ?

கருத்தடை " லூப் "

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை எழும்பூர் பிரசவ ஆஸ்பத்திரியில் 3—8—1967ல் ஒரு பெண்ணுக்கு அந்த பெண் சம்மதமின்றி கருத்தடை " லூப் " மாட்டப்பட்டதா ?

(இ) இதுபற்றி மருத்துவச்சாலை கண்காணிப்பாளருக்கும், போலீசுக்கும் புகார் செய்யப்பட்டதா ?

(உ) அதன்மேல், எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: இது குறித்துக் கவனிக்கப்பட்டது. அந்தப் பெண்ணின் இசைவின்றிக் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டதாகத் தெரியவில்லை. குறிப்பிடப்பட்ட இந்த மருத்துவ மனையில் கருத்தடை வளையம் பொருத்தப்பட்ட 3,000 மகளிர்களில் இந்தப் பெண் சம்பந்தப்பட்ட வரையில் மட்டுமே கவனிப்பின்மையால் முன்னதாகவே இவரிடம் கையொப்பம் பெறப்படவில்லை. இது குறித்து நடவடிக்கை எடுப்பதற்கு அவசியமிருப்பதாக அரசாங்கம் கருதவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, அந்தப் பெண்ணின் சம்மதமின்றி பிரசவம் ஆகிய 5, 6, நாட்களுக்குள் தனக்கு லூப் பொருத்திவிட்டதாக பல இடங்களில் புகார் செய்தும், பத்திரிகையில் அறிக்கைகள் கொடுத்தும் இருக்கிறாள். அந்த மாதிரி தவறு நடக்காமல் இனிமேல் இருக்க அரசு கவனிப்புக் கொடுக்குமா ?